

கடலூர் மேற்கு மாவட்டம், அண்ணாகிராமம் ஒன்றியம் , கீழ்கவரப்பட்டு ஊராட்சி வடக்குப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த தி.மு.க. கிளை கழக பிரதிநிதி சாம்பசிவம் அவர்கள் உடல்நிலை பாதிக்கப்பட்டு வீட்டில் அவதிப்பட்டு வந்த நிலையில், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் நேரில் சந்தித்து உடல் நலம் விசாரித்து, மருத்துவ நிதி உதவி வழங்கினார். மேலும் அறுவை சிகிச்சைக்கு தேவையான முழு மருத்துவ செலவையும் ஏற்பதாக அமைச்சர் கூறினார். அண்ணாகிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே.வெங்கட்ராமன்,கழக பொதுக்குழு உறுப்பினர் என்.பலராமன் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.8.2024) ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் தலைமையில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரியக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நல வாரிய உபத் தலைவர் செ.கனிமொழி பத்மநாபன், அலுவல் சார்ந்த உறுப்பினர்கள் பள்ளிக் கல்வித்துறை அரசு முதன்மைச் செயலாளர் மதுமதி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலாளர் க.லட்சுமி பிரியா, ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குனர் த.ஆனந்த், உறுப்பினர் செயலர் / தாட்கோ மேலாண்மை இயக்குனர் க.சு.கந்தசாமி, நிதித்துறை துணைச் செயலாளர் ம.பிரதிவிராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை இணைச் செயலாளர் ஷ்ரவன் குமார் ஜடாவத், நகராட்சி குடிநீர் வழங்கல் துறை துறை இணைச் செயலாளர் க.கற்பகம், பழங்குடியினர் நலத்துறை இயக்குனர் அண்ணாதுரை மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

### சங்கரன்கோவில்-ராஜபாளையம் லெவல் கிராசிங்கில்

# பறக்கும் மேம்பாலம் அமைக்கத் தேவையான நடவடிக்கை எடுத்திடுக!

## மக்களவையில் - ராணி ஸ்ரீகுமார் வலியுறுத்தல்!

புதுடெல்லி ஆக.15-

மக்களவையில் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆற்றிய உரை வருமாறு:-

சங்கரன்கோவில்- ராஜபாளையம் லெவல் கிராசிங்கில் மேம்பாலம் அமைக்க கேட்ட கோரிக்கையை தென்காசி தொகுதியில் நீண்டகாலமாக நிலுவையில் உள்ளது.பொதுமக்களுக்கும், சங்கரன்கோவில் வாசிகளுக்கும் மிகுந்த சிரமத்தை ஏற்படுத்தும் இரயில்வே தொடர்பான முக்கிய பிரச்சினையை அவசர அவசரமாக கொண்டு வர விரும்புகிறேன்.

எனது தொகுதியில் டெம்பிள் சிட்டி என்று பிரபலமாக அறியப்படும் சங்கரன்கோவில் முதல்தர நகராட்சி மற்றும் வளரும் நகரமாகும்.

சங்கரன்கோவில் ராஜபாளையம் மாநில நெடுஞ்சாலையில் ரயில்வே லெவல் கிராசிங் உள்ளது.அதனால் ஏற்படும் போக்குவரத்து நெரிசல் அப்பகுதி மக்களுக்கு சிம்ம சொப்பனமாகத் திகழ்கிறது.

இந்த வழியில் தினமும் 12 வழக்கமான ரயில்கள் செல்கின்றன. கூடுதலாக, இந்த லெவல் கிராசிங்கைக் கடக்கும் 4 வாராந்திர ரயில்கள் உள்ளன.ஒவ்வொரு 2 மணி நேரத்திற்கும் ஒரு ரயில் இந்த லெவல் கிராசிங்கைக் கடக்கிறது. இதனால் ஒவ்வொரு முறையும் அரை மணிநேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இந்த லெவல் கிராசிங்கை தினமும் 50,000 க்கும் அதிகமான வாகனங்கள் கடந்து செல்கின்றன.இந்த



இடத்தைச் சுற்றி 4 பெரிய பள்ளிகள் உள்ளன.சுமார் 5,000 (ஐயாயிரம்) மாணவர்கள் தங்கள் பள்ளிகளுக்குச் சென்று மீண்டும் தங்கள் வீடுகளுக்குச் செல்ல இந்த லெவல் கிராசிங்கை பயன்படுத்துகின்றனர். அருகிலுள்ள தனியார் நிறுவனங்களில் பலர் பணி புரிகின்றனர்.

மேற்கூறியவை தவிர, சிறு சாலையோர வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் தங்கள் காய்கறிகள் மற்றும் பூக்களை அருகில் உள்ள சந்தைகளுக்கு இவ்வழியாக எடுத்துச் செல்கின்றனர். இந்த லெவல் கிராசிங்கில் காத்திருப்பதால் அவர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது.

தினமும் நடக்கும் போக்கு வரத்து நெரிசலால் நோயாளிகளை ஏற்றிச் செல்லும் அவசரகால ஊர்திகள் கூட இந்த லெவல் கிராசிங்கை எளிதில் கடக்க முடியவில்லை.மூத்த குடிமக்கள் மற்றும் குழந்தைகள் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றனர்.

எனவே சங்கரன்கோவில் இராஜபாளையம் சாலையின் மீது பறக்கும் மேம்பாலம் அமைக்க தேவையான நடவடிக்கையை ஒன்றிய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் பேசினார்.

### காரைக்குடி நகராட்சியை

# மாநகராட்சியாக ஆணை பிறப்பித்த முதல்வருக்கு நன்றி!

## மேயர் எஸ்.முத்துதுரை தெரிவித்தார்!

சிவகங்கை, ஆக.15-

காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக ஆணை பிறப்பித்த முதல்வருக்கு மேயர் எஸ்.முத்துதுரை நன்றி கூறினார் .

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தமிழக முதல்வர் அறிவித்து இம்மாதம் 12ஆம் தேதி அதற்கான ஆணையினை காரைக்குடி மாநகராட்சி மேயர் எஸ். முத்து தரை, துணை மேயர் என். குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார்.

**பொதுமக்கள் வரவேற்றனர்**

மாநகராட்சி ஆணையினை பெற்றுக் கொண்ட மேயர் எஸ்.முத்து துரை, துணை மேயர் ஏன்.குணசேகரன் ஆகியோர்; காரைக்குடி நகராட்சி அலுவலகத்திற்கு வருகைதந்தார்கள். அவர்களை நகர்மன்ற உறுப்பினர்கள் நகராட்சி அதிகாரிகள் பொதுமக்கள் வரவேற்றார்கள்.அதனைத் தொடர்ந்து காரைக்குடியில் செய்தியாளர்களிடம் மேயர் எஸ்.முத்துதுரை கூறியதாவது.

நீண்ட நாள் கோரிக்கையான காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்து அதற்கான ஆணையை பிறப்பித்துள்ளார்கள் .அதற்காக முதல்வர் அவர்களுக்கு முதலில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக அறிவிக்கப்பட்ட நான்கு மாநகராட்சி மேம்பாட்டிற்காக ருபாய் 2000 கோடி நிதியினை முதல்வர் அறிவித்துள்ளார்கள். காரைக்குடிக்கு மாநகராட்சிக்கு நிதி வந்ததும் பணிகள் நடைபெறும்.

**புதிய வரிகள் விதிக்கப்படாது**

மாநகராட்சியாக உயர்ந்ததால் புதிதாக வரி விதிக்கப்படும் என்ற ஒரு வதந்தி எழுப்பப்படுகிறது. புதிதாக வரிகள் ஏதும் விதிக்கப்பட மாட்டாது. நகராட்சியை மாநகராட்சியாக உருவாக்குவதற்கு உறுதுணையாக இருந்த நகராட்சித் துறை அமைச்சர் கே .என்.நேரு, கூட்டுறவு துறை அமைச்சர் கே.ஆர். பெரிய கருப்பன், முன்னாள் அமைச்சர் மு.தென்னவன் மாநகராட்சியாக அறிவித்து ஆணை பிறப்பித்த முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆகியோருக்கு காரைக்குடி மாநகராட்சி சார்பிலும் மாநகர மக்கள் சார்பிலும் மிகுந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

தொடர்ந்து கழகத் தலைவர் பொறுப்பேற்ற மூன்றரை ஆண்டுகளில் காரைக்குடி நகருக்கு பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதற்காகமுதல்வருக்கும் காரைக்குடி மாநகரின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் ஆகியோருக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றோம்.

பேட்டியின் போது துணை மேயர் என். குணசேகரன் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் இருந்தார்கள்.

### சிவகங்கையை தொடர்ந்து புறக்கணிக்கும் ஒன்றிய ரயில்வே துறை!

# அனைத்துக் கட்சிகள் சார்பில் மீண்டும் தொடர் மறியல் போராட்டம்!

## நகர்மன்றத் தலைவர் துரை.ஆனந்த் அறிவிப்பு!

சிவகங்கை. ஆக.15-

சிவகங்கை மாவட்ட தலைநகராக சிவகங்கை உள்ளது.மாவட்ட ஆட்சியர் மாவட்ட காவல் கண்காணிப் பாளர் உட்பட அனைத்து மாவட்ட அரசு அலுவலகங்கள் உள்ளது. ஆயிரக்கணக்கான அரசு அலுவலர்கள் வெளியூர்களிலிருந்து பணியாற்றிவருகிறார்கள். இதுதவிர காளையார் கோவில் ,கல்லல் மறவமங்கலம், இளையான்குடி , மற்றும் பல்வேறு ஊர்களில் இருந்து குடும்பத்துடன் சென்னை மற்றும் வெளியூர் வெளிமாநிலங்களுக்கு பெரும்பாலான வர்கள் ரயிலில் பயணம் செய்ய விரும்புவார்கள்.

அரசு உயர் அதிகாரிகள் பல்வேறுதுறை அலுவலர்கள் தினசரி சென்னைக்கு துறைசார்ந்த பணிக்கு செல்லவேண்டி உள்ளது.ஆனால் போதிய ரயில் வசதி இல்லாமல் சிரமப்படுகிறார்கள். சென்று கொண்டிருக்கும் ரயில்கள் சிவகங்கையில் நிற்காமல் சென்று கொண்டிருக்கிறது. தற்போது சென்னைமற்றும்வெளிமாநிலங்களிலிருந்து திருச்சி, காரைக்குடி, சிவகங்கை மானாமதுரை வழியாக ராமேஸ்வரம், செங்கோட்டை ஆகிய ஊர்களுக்கு 10க்கும் மேற்பட்ட தினசரி மற்றும் வாராந்திர ரயில்கள் சிவகங்கை வழியாக சென்று கொண்டிருக்கின்றது.

ஆனால் மாவட்ட தலைநகரான சிவகங்கைவழியாக விருதுநகர் , ராமேஸ்வரத்திலிருந்து திருச்சிக்கும் , இரவு சென்னை செல்லும் சேது எக்ஸ்பிரஸ், ராமேஸ்வரம் ரயில் மட்டும் நின்று செல்கிறது. வாராந்திர ரயிலில் சிலம்பு எக்ஸ்பிரஸ், செங்கோட்டை, புவனேஸ்வர், வாரணாசி,பாண்டிச்சேரி ஆகிய ரயில்கள் மட்டும் சிவகங்கையில் நின்று செல்கிறது.பகல்நேரத்தில் ராமேஸ்வரத்திலிருந்து சென்னைக்கு ரயில் வசதி கிடையாது. ஏற்கனவேபல வருடங்களாக மன்னார்குடி மானாமதுரை ரயில் பகல் 2.30 மணிக்குசிவகங்கை திருச்சி வழியாக சென்று கொண்டிருந்தது.

இந்த ரயில் மூலம் தஞ்சாவூர் கோவை, சேலம், மற்றும் பல்வேறு ஊர்களுக்கு சென்று வந்தார்கள்.கடந்த ஒராண்டுக்கு முன் காரைக்குடி மானாமதுரை ரயில்வே பாதையில் வேலை நடப்பதாக கூறி காரைக்குடியுடன் நிறுத்தப்பட்டது. ரயில்வே பணிகள் முடிவடைந்து ஓராண்டிற்கு மேலாகியும் இந்த ரயில் விடப்படவில்லை இது போல் வாராந்திர ரயில் கள் ராமேஸ்வரம் அயோத்தி, வேளாங்கண்ணி செங்கோட்டை தாம்பரம் மற்றும் சிறப்பு ரயில்கள் சிவகங்கை, மானாமதுரை, ஜங்ஷனில் நிற்பதில்லை.

சிவகங்கை, மானாமதுரை, விருதுநகர், தென்காசி, செங்கோட்டை வழியாக சென்றால் கொல்லம் புனலூர் போன்ற ஊர்களுக்கு செல்லமுடியும். இப்பகுதியிலிருந்து செல்லும்ஆயிரக்கணக்கான ஐயப்ப பக்தர்கள் நேரடியாக செல்லமுடியும். பெரும்பாலான ரயில்கள் , சிவகங்கையில் நிறுத்தப்படுவதில்லை . இது குறித்துபலமுறை ரயில்வே துறைக்கு அரசியல் கட்சிகள் ரயில்வே பயணிகள்சங்கம்,நுகர்வோர் அமைப்பு ஆகியவை கோரிக்கை மனு அளித்தும் எவ்வித முன்னேற்றமும் இல்லை.

இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி கடந்த வருடம் செப்டம்பர் மாதம் சிவகங்கை நகர்மன்ற தலைவரும், நகர்கழக செயலாளருமான சி.எம்.துரை.ஆனந்த் தலைமையில்சர்வகட்சியினர் பல்வேறு சமூக அமைப்புகள், மற்றும் பொதுமக்கள் பங்கேற்ற பெரிய அளவிலான ரயில் மறியல் போராட்டம்நடைபெற்றது.

அதை தொடர்ந்து ரயில்வே துறை அமைச்சர் மற்றும் ரயில்வே துறை உயர் அதிகாரிகளை தில்லியில் நகர்மன்ற தலைவர் தலைமையில் அனைத்து கட்சி குழுவினர் நேரில் சந்தித்து இந்த கோரிக்கைகளை வலியுறுத்தி கோரிக்கை மனுவும் கொடுக்கப்பட்டது . விரைவில் கோரிக்கைகளை நிறைவேற்றதாக ரயில்வே துறை அமைச்சர் மற்றும் ரயில்வே உயர் அதிகாரிகளால்உறுதி அளிக்கப்பட்டது.

ஓராண்டாகியும் ஒரு ரயில் கூட நிறுத்தப்படவில்லை. நிறுத்தப்பட்ட மன்னார்குடி மானாமதுரை ரயில் இயக்கப்படவில்லை. இந்த நிலையில் நேற்று 14ஆம் தேதி முதல் காரைக்குடியில் இருந்து மைசூர் வரை புதிதாக ரயில் இயக்கப்படு கிறது இது காரைக்குடி வரை மட்டுமே இயக்கப்படுகிறது.

காரைக்குடிக்கு அடுத்து மானாமதுரை ஜங்ஷன் உள்ளது. பரமக்குடி,ராமேஸ்வரம், ராமநாதபுரம், முதுகுளத்தூர், கமுதி, சிவகங்கை, இளையான்குடி, காளையார்கோவில் ,கல்லல், மற்றும் பல்வேறு ஊர்களில் இருந்து பெங்களூரில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை பார்த்து வருகிறார்கள்.

ராமேஸ்வரத்திலிருந்து நேரடியாக பெங்களூருக்கு ரயில் வசதிவிடப்பட வேண்டும் என்று நீண்ட நாட்களாக அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்து உள்ளார்கள்.அதற்கு ரயில்வே நிர்வாகம் செவிசாய்க்கவில்லை .மாறாக ரயில்வே நிர்வாகம் . காரைக்குடியில் இருந்து மைசூர் வரை ரயிலை இயக்குகிறது.

இந்த ரயில் ராமேஸ்வரத்திலிருந்து இயக்கினால் தென் மாவட்ட மக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதிலும் ஒன்றிய அரசு மாவட்ட தலைநகர் சிவகங்கையை புறக்கணித்து காரைக்குடி வரை இயக்குகிறது. இவ்வாறு தொடர்ந்து மாவட்ட தலைநகரான சிவகங்கையை புறக்கணித்து வரும் ஒன்றிய அரசு மற்றும் ரயில்வே துறையை கண்டித்து விரைவில் அனைத்துக் கட்சிகளின் ஆலோசனை கூட்டம் நடத்திமேற்கண்ட கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி தொடர் ரயில் மறியல் போராட்டம் நடத்த உள்ளதாக நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை. ஆனந்த் தெரிவித்துள்ளார்.

# நெல்லை மாநகர நிர்வாகிகள் - பகுதிச் செயலாளர்கள் கூட்டம்!

## மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிவிப்பு

நெல்லை.ஆக.15-

முதலமைச்சர் - கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் மாநகர கழக,பகுதி கழக,நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நெல்லை டவுண் மாநகர கழக அலுவலகத்தில் நாளை (16.08.2024) மாலை 6 மணி அளவில்

நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் என்ற கோபி தலைமையில் மாநகர துணை செயலாளர் அப்துல் கையூம், பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை)அன்டன் செல்லத்துரை(பாளை) துபாய் சாகுல்(மேலப்பாளையம்) ஆகியோர் முன்னிலையில் நடைபெறுகிறது என நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஆகவே மாநகர கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள்,நிர்வாகிகள் மற்றும் மாநகர பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



மக்களவையின் வீட்டு வசதிக் குழுவில் உறுப்பினராக இடம்பெற்றுள்ள தென் சென்னை மக்களவை தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், புதிய எம்.பி.க்களுக்கு டெல்லியில் வீடு ஒதுக்குவது தொடர்பாக மக்களவை வீட்டு வசதிக் குழு தலைவர் டாக்டர் மகேஷ் சர்மா எம்.பி. யைச் சந்தித்து ஆலோசனை நடத்தினார்.



திருப்பத்தூர் மாவட்டம், நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய தி.மு.க சார்பில் ஆத்தூர்குப்பம், கத்தாரி, தோப்பலகுண்டா, சொர்க்காயல்நத்தம், நாயனசெருவு, கொத்தூர், கொண்டகிந்தனப்பள்ளி, பச்சூர், கே.பந்தாரப்பள்ளி ஆகிய ஊராட்சிகளில் மாவட்ட செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. தலைமையில் திருவண்ணாமலை நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சி.என்.அண்ணாதுரை வாக்களித்து வெற்றி பெற செய்த வாக்காளர்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். நாட்றம்பள்ளி மேற்கு ஒன்றிய செயலாளர் என்.கே.ஆர்.சூரியகுமார், ஆ.சம்பத்குமார், டி.சாமுடி, கே.சாம்மண்ணன், வெண்மதி முனிசாமி, வீ.வடிவேல், எம்.சிங்காரவேலன், டி.தேவராஜி மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள், பெண்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டார்கள்.



சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் து.விக்டர் தலைமையில் நேற்று (14–8–2024) மாவட்டக் கழக அலுவலகம் அமைந்துள்ள நுங்கம்பாக்கம், காம்தார் நகரில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு நாணயம் வெளியீட்டு விழா நிகழ்வு, கழக வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக எடுத்துரைத்து சிறப்புரையாற்றினார். உடன் பகுதி செயலாளர்கள், மாவட்ட, மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டக் கழக செயலாளர்கள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.